**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC.NO.03/2023**

Deposition of LW9 examined as Pw9 Dt. 24.03.2026

| | |
|---|---|
| Name | திரு. பார்த்திபன் |
| Father's Name | கோதண்டபாணி |
| District | காரைக்கால் |
| Age | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.03.26

(A1 , A2 Present)

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து 31.03.2025 ம் வருடம் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 11.06.2021 ம் வருடம் அன்றைய தினம் பணியில் இருந்த தலைமை காவலர் 1234 செல்வகுமார் என்பவர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆன்ந்த், த/பெ. செல்வம் என்பவரிடம் பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலையம் வந்து மயிலாடுதுறை காவல்நிலைய குற்ற எண் 1368/2021, ச/பி. 294(b),341,324, 323, 506(2) ஆகிய ச/பி கீழ் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக என்னிடம் வைத்தார். நான் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.06.2021 ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான ஆனந்த தாண்டவபுரம் ரயில்வே கேட் அருகே சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மோகன், த/பெ. உத்திராடம் 2. ராஜமாணிக்கம் த/பெ. மருதன், சாட்சிகள் இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். பின்னர் வழக்கு சம்பவம் உ ண்மை என்பதால் எதிரிகளை தேடி வந்த நிலையில் மறுநாள் 12.06.2021 ம் தேதி காலை 08.30 மணிக்கு நீடூர் பேருந்து நிலையம் அருகில் 1வது எதிரி சர்ண்ராஜ், 3வது எதிரி கருணாகரன் ஆகியோர்களை கைது செய்து காவல்நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றம் வசம் ஒப்படைதேன். 2வது எதிரி மாண்புமிகு. சென் னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி முன் பிணை பெற்று சென்று விட்டபடியால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் அ.சா.1 மற்றும் அ.சா.6 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாரதிதாசன் என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகளை பெற்று வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் செல்வகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தனது புலன் விசாரணையை முடித்து இந்நீதிமன்றத்தில் எதிரி மீது

G. Parti.. SI (Rtd) 24/03/26

294(b),341,324, 323, 506(2) இதசவின் கீழ் 26.07.2021 ம் தேதி இறுதி அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து பதிவேட்டில் தெரிந்த 2 நபர்கள் கல்லாலும், அருவாளாலும் தாக்கினார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் தெரிந்த 3 நபர்கள் அருவாளால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து தாக்கியதாக சொல்லபட்டுள்ளது என்றால் சரியல்ல. அது என்னவகையான வாகனம், பதிவெண், அதன் நிறம் என்னவென்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தியாக சொல்லப்படும் அருவாள் மற்றும் இருசக்கர வாகனத்தை தடயப்பொருளாக கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு எப்படி வந்தார்கள் என்று புகார் வாக்கமூலத்திலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் சிகிச்சைக்கு வந்த நபர்கள் இருவரும் வெளிப்புற நோயாளியாக சிகிச்சை பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் எதிரிகளுக்கு எதிராக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் தாரர் மருத்துவ மனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் அ.சா.1 க்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றாலும் சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை மறைத்து எதிரிகளை பழிவாங்கும் கெட்ட எண்ணத்தில் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யமாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எ.சேகர் (ஆய்வாளர்) SI
24/03/2026

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன் நேர்நிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

24/3/26.

நீதித்துறை நடுவர் எண்
மயிலாடுதுறை